அந்தரங்கமானது

NEW

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## புதிய பாடத்திட்டம்

## 51 - சித்திரம்

Department of Examinations



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# புள்ளி வழங்கும் திட்டம் - 2020

## புதிய பாடத்திட்டம்

## I, II, III

## 51 - சித்திரக்கலை

**சித்திரக்கலை** I

இவ்விடைத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி I - 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளதுடன் பகுதி II - 07 வினாக்களை கொண்டுள்ளது. பல்தேர்வு வினா கட்டாய வினாவாகவும் பகுதி II அ, ஆ, இ என மூன்று உப பகுதிகளைக் கொண்டது. அ பகுதியிலிருந்து எவையெனும் 2 வினாக்களையும் ஆ, இ பகுதியிலிருந்து 1 வினா வீதம் தெரிவு செய்து 4 வினாக்களிற்கு விடை தருக. பல்வேறு தேர்வு வினாக்களுக்கு 40 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 15 வீதம் 60 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை** II

இவ்வினாத்தாளில் ஒரே ஒரு செய்முறை வினா மட்டுமே உள்ளது. சுதந்திரமான இரேகை வரைதலின் மூலம் அசையாப் பொருட்கூட்டத்தைப் பார்த்து வரைதலும் வர்ணம் தீட்டுதலும். இதற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**சித்திரக்கலை** III

இவ்வினாத்தாள் அ,ஆ,இ என மூன்று செய்முறை வினாக்களை கொண்டது.

அ. சித்திர ஒழுங்கிணைப்பு

ஆ. அலங்கார ஆக்கம்

இ. கிரபிக் சித்திர நிர்மானிப்பு

குறிப்பிட்ட மூன்று பகுதிகளில் இருந்து ஒரு பகுதியை தெரிந்து ஒரு வினாவை தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். இவ்வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் மூன்று வினா பத்திரத்திற்கு 300 புள்ளிகள். இதை மூன்றால் வகுப்பதன் (300ஃ3 ஸ்ரீ 100) மூலம் இறுதிப் புள்ளியை பெறுதல் வேண்டும்.

முதலாம் வினாப் பத்திரத்திற்கு புள்ளிகள் வழங்கும் போது பகுதி இரண்டிற்கும் வேறுவேறாக புள்ளி வழங்குவதற்கு கவனம் எடுத்தல் வேண்டும். முதலாம் பகுதியான பல்தேர்வு வினா பத்திரத்திற்கு விடை அவ்வினாப்பத்திரத்திலேயே அளிக்கப்பட்டிருக்கும். அப்பத்திரத்திலேயே சரி பிழை இட்டு பெறப்படும் உரிய புள்ளிகளை விடைத்தாளின் மேல் வலப்பக்கத்தில் காணப்படும் கூட்டினுள் பதியவும். மிகுதி வினாக்கள் மூன்றிற்கும் வேறு வேறாக மதிப்பீடு செய்து ஒவ்வொன்றிற்கும் கிடைக்கப் பெறும் புள்ளிகளை பிழை இன்றி அவ்விடையின் இறுதியில் எழுதி அவற்றை கூட்டி அவ்வினாக்களின் கூட்டுத்தொகையை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் வலப்பக்க மேல்மூலையில் காணப்படும் உரிய கூட்டினுள் இட்டு கூட்டிக் கொள்ளவும்.

ஒவ்வொரு விடைகளுக்கும் கிடைக்கும் புள்ளியை வேறு வேறாக வினா இலக்கத்திற்கு எதிரே முன்பக்கத்திற்கு கொண்டு வந்து இட்டு முழுக் கூட்டுத்தொகையை பிழை இன்றி முதலாவது பத்திரத்திற்கு உரிய கூட்டினுள் இடவும். அவ்வாறே ஐஐஇஐஐஐ பத்திரங்களுக்கு நியதிகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட புள்ளிகளை முதல் பக்கத்தில் உள்ள உரிய கூட்டினுள் பதிக. வினாப்பத்திரம் மூன்றிற்கும் 300 புள்ளிகள் பெறப்படும். அதனை மூன்றால் வகுத்து இறுதிப்புள்ளியை தீர்மானித்தல் வேண்டும். இலக்கங்களை எழுதும்போது விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும்.

Department of Examinations

புள்ளியிடப்பட்ட ஒவ்வொரு விடைத்தாளும் இன்னுமொரு பரீட்சகரினால் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பரீட்சகரும் தத்தம் குறியீட்டு எண்களை தாம் புள்ளி இட்ட விடைத்தாளிலும் குறித்த இடங்களில் கட்டாயமாக இடவேண்டும்.

புள்ளிப்பட்டியல்களைப் பதியும் போது புள்ளிகளைப் பதியும் பரீட்சகர் தாமே விடைத்தாளை பார்த்து புள்ளிகளைப் பதியவேண்டும். ஒருவர் வாசிக்க ஒருவர் பதியவே கூடாது. பிழைகள் ஏற்படாமல் பொறுமையாக பதிதல் வேண்டும். ஏதேனும் பிழைகள் ஏற்படுமாயின் அதைத் தனிக்கோட்டினால் வெட்டி அருகில் எழுதி கையொப்பம் இட வேண்டும். அழித்தல், சுரண்டுதல், அழிக்கும் மை, பாவித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

சில வேளைகளில் மேலதிகமான வினாக்களுக்கும் விடை அளித்திருக்கக் கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் விடைத்தாளில் எழுதப்பட்டிருக்கும் சகல விடைகளையும் புள்ளியிட்டு முதற்பக்கத்தில் அப்புள்ளிகளைப் பதிந்து அப்புள்ளிகளில் மிகக் குறைந்த புள்ளியை மட்டும் மேலதிகம் எனக் குறிப்பிட்டு வெட்டி மிகுதிப் புள்ளிகளைக் கூட்டி மொத்தப் புள்ளி காணப்பட வேண்டும்.

விடைத்தாள்களைப் புள்ளியிட சிவப்பு மைப் பேனாவைப் பயன்படுத்துக.

Department of Examinations

**பத்திரம் I**

நோக்கம்:- 1. இலங்கை, இந்தியா, ஐரோப்பிய கலை நிர்மானங்களையும் அதன் கலாச்சார பின்னணியையும் பற்றி மாணவர்கள் பெற்றுள்ள தேர்ச்சியை அளவிடல்.

2. பிரசித்தி பெற்ற பல்வேறு கலைஞர்களையும் அவர்களது கலை ஆக்கங்களையும் அறிந்து அவற்றின் பின்னணி, ஊடகப்பயன்பாடு கருப்பொருள் நுட்பமுறைகளையும் உணர்வு வெளிப்பாட்டையும், நயத்தல் திறனையும் அளவிடல்.

3. கற்ற விடயங்களை சரியாகவும், தர்க்கரீதியாகவும் முன்வைக்கும் திறனை அளவிடல்.

**பத்திரம் II**

அசையாப் பொருட்கூட்டம் வரைதலும் வர்ணம் தீட்டுதலும்

நோக்கம்:- 1. இயற்கைச் செயற்கைப் பொருட்களின் இயல்பையும், வடிவமைப்பையும் விளங்கிக் கொள்ளும் திறனையும் கோட்பாடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான திறன்களையும் நுட்பமுறைப் பயன்பாட்டையும் அளவிடுதல்.

2. இரேகையைப் பயன்படுத்தி பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் சித்தரிக்கும் திறனையும் அளவிடுதல்.

3. வர்ணத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நுட்பமுறையையும் பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் முறையில் வர்ணத்தை பயன்படுத்தும் திறனையும் அளவிடுதல்.

IIம் பத்திரத்தின் பொருட்டு பரீட்சார்த்தி ஒரு வர்ணச் சித்திரத்தை மாத்திரமே வரைந்திருப்பர். இதில் பொருட்கூட்டத்தை யதார்த்தத் தன்மையில் வரைந்து வர்ணம் தீட்டி பூரணப்படுத்தப்பட்டிருப்பதையே எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்பொருட்டு புள்ளிகளை வழங்கும் பொழுது உரிய நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளைத் தீர்மானிக்க வேண்டும்.

ஒவ்வொரு நியதிகளின் கீழ் பரீட்சார்த்தி எவ்வளவு தூரத்தை அண்மித்துள்ளார் என்பதை பிழையின்றி தீர்மானித்து புள்ளி வழங்குதல் வேண்டும். இங்கு தமது தனிப்பட்ட இரசனைகளுக்கு இடமளிக்காது மதிப்பீடு தொடர்பாக வழங்கப்பட்டுள்ள நியதிகளின் அடிப்படையில் பரீட்சார்த்தி வெளிப்படுத்தியுள்ள திறன்களை விளங்கிக் கொண்டு அதன் அடிப்படையில் மதீப்பீட்டை செய்தல் வேண்டும்.

Department of Examinations

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. பொருட் கூட்டத்தை கடதாசிப் பரப்பில் கருத்துடன் ஒழுங்கமைத்துள்ள திறன் (20 புள்ளிகள்)
2. பொருட்களின் பிரமாணப் பண்பையும் அமைப்பையும் இயல்பையும் வெளிப்படுத்தும் திறன். (20 புள்ளிகள்)
3. கோட்பாடுகளை பயன்படுத்திக் கொள்ளும் திறன்.
   (தூரதரிசனம், முப்பரிமாணம், கண்மட்டம்) (20 புள்ளிகள்)
4. வர்ணப் பயன்பாடும், இயல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டும் திறன். (20 புள்ளிகள்)
5. சித்திரத்தின் பூரணப்பாடு (20 புள்ளிகள்)

II ம் பத்திரத்திற்கு கிடைக்கும் முழுப்புள்ளி - 100 புள்ளிகள்

**பத்திரம் III**

"அ" கருத்து வெளிப்பாட்டு சித்திரம்

நோக்கம்:-

இயற்கையில் காணக் கிடைக்கின்ற இயற்கையானதும் செயற்கையானதுமான சூழலையும் பொருட்களின் தன்மையினையும் அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்ச்சிகள் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுள்ள அனுபவங்களை ஆக்கச் சிறப்புடன் வெளிப்படுத்தும் திறனையும் இரசனை வளர்ச்சியும் மதிப்பிடுதல்.

பரீட்சார்த்திகள் தெரிவு செய்துள்ள தலைப்பை சித்திரிக்கும் பொழுது பல்வேறு மட்டங்களில் திறன்களை வெளிப்படுத்தி இருப்பதை காணலாம்.

இரேகையை கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தும் பொழுது குறைந்த கூடிய மட்டத்தில் வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தைப் போன்று மனித வடிவங்களை கையாளும் போது அது போன்ற வேறுபாட்டை காணக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்.

வர்ணத்தை பயன்படுத்தும் பொழுது பல்வேறு நுட்பமுறைகளை பயன்படுத்தி உச்ச மட்ட திறன் வெளிக்காட்டுபவர்களிடையே செயன்முறை திறன் வளர்ச்சி பெறாத பரீட்சார்த்திகளும் வெளிப்படுத்திருக்கும் செயன்முறைத் திறன்களின் மட்டத்தை இனங்கண்டு அதன் பிரகாரம் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தெரிவு செய்த தலைப்பை சித்திரிக்கும் பொழுது அதற்குப் பொருத்தமான நிகழ்வினையும் சூழலையும் வெளிப்படுத்தியிருக்கும் தன்மை. (20 புள்ளிகள்)

2. மனிதர் பிராணிகளின் உருவங்களுடன் சகல வடிவமைப்புக்களையும் பரப்பில் ஒழுங்கிணைத்துள்ள தன்மை. (20 புள்ளிகள்)

3. கோட்பாட்டுப் பயன்பாடு தொடர்பான விளக்கம். (20 புள்ளிகள்)

4. வர்ணப் பயன்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கும் திறன். (20 புள்ளிகள்)

5. பூரணப்பாடு (20 புள்ளிகள்)

(முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்)

Department of Examinations

பத்திரம் III (ஆ)

அலங்காரமும் அலங்கரிப்பும் ஆக்கமும்

நோக்கம்:-

அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறு தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிட்டலும் அலங்கரித்தல் தொடர்பாகவும் பரீட்சார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

பத்திரம் III க்கு விடையளிக்கும் பொழுது

பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதியை தெரிவு செய்கின்றனர். அவர்களிடையே அதிகமானோர் கோட்பாட்டு அறிவுடன் புதிய முறையில் அலங்காரத்தை நிர்மாணிப்பதுடன் கோட்பாடு அறிவு இல்லாது அலங்காரத்தை நிர்மானிப்போர் பலர் உள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளின் ஆக்கங்களில் வெளிப்படுகின்ற அவர்களுடைய அனுபவத் திறன்கள் பலவாகும். நியதிகளின் மூலம் அவர்கள் வெளிக்காட்டியுள்ள திறன்களின் அளவை விளங்கிக் கொண்டு புள்ளிகளை வழங்குதல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்கு பொருத்தமாக நிர்மானத்தை ஏற்ற வகையில் புதிய முறையில் திட்டமிட்டு கொள்ளும் முறை. (20 புள்ளிகள்)
2. நுகர்வோர் தேவைக்கு பொருத்தமாகவும் கைத்தொழிலுக்கு ஏற்றதாகவும் அமைத்தல். (20 புள்ளிகள்)
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதல் பயன்படுத்திக் கொள்ளும் திறன் (20 புள்ளிகள்)
5. அலங்கரிப்பு அழகும் ஆக்கத்திறன் பூரணப்பாடும் (20 புள்ளிகள்)

முழுப்புள்ளிகள் 100 புள்ளிகள்

**பத்திரம் III (இ) கிரபிக் சித்திர நிர்மானிப்பு**

நோக்கம்:-

வியாபார தேவைகளுக்கும் தொடர்பாடல் செயல்பாட்டிற்கும் ஏற்ற வகையில் ஆக்கச் சிறப்புடன் திட்டமிடலும், அலங்கரித்தல் தொடர்பாகவும் பரிசார்த்தி பெற்றுள்ள திறன்களை பரீட்சித்தல்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்பிற்கு பொருத்தமான நிருமானச் செயலுக்கும் உரிய வகையில் புதிய முறையில் திட்டமிட்டுக் கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
2. வியாபாரத்திற்கும் தொடர்பாடல் தேவைகளுக்கும் ஏற்ற வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமாகவும் அமைதல். (20 புள்ளிகள்)
3. இரேகை வடிவங்களை கருத்துடன் பயன்படுத்தி கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
4. பொருத்தமான வர்ணத்தை தெரிதலும் பயன்படுத்தி கொள்ளும் திறன். (20 புள்ளிகள்)
5. அலங்கரிப்பு, அழகு, நிருமானத்திறனும் பூரணப்பாடும் (20 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் 100 புள்ளிகள்)

Department of Examinations

# விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ △ $\frac{4}{5}$

........................................................................

........................................................................

(ii) ........................................................................ ✓ △ $\frac{3}{5}$

........................................................................

........................................................................

(iii) ........................................................................ ✓ △ $\frac{3}{5}$

........................................................................

........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

Department of Examinations

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

o o o

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

චිත්‍ර කලාව I
சித்திரக்கலை I
Art I

**51 T I**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

※ இவ்வினாத்தாள் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
**பகுதி I**
- **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
- ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**பகுதி II**
- மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- **'அ'** பகுதியிலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும் **'ஆ', 'இ'** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினா வீதமும் தெரிவுசெய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ பகுதி **I,** பகுதி **II** ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |
| 1ஆம் பரீட்சகர் | 2ஆம் பரீட்சகர் |
| | |

Department of Examinations

## பகுதி I

● **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையைத்** தெரிவுசெய்க.

**1.** இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால குகை ஓவியங்களில் உட்குடைவு (சுரண்டல்) முறையில் வரையப்பட்டுள்ள 'யானையும் குட்டியும்' என்ற ஓவியத்தைக் காணக்கிடைப்பது
(1) தந்திரிமலை குகையிலாகும். (2) பட்டதொம்ப குகையிலாகும்.
(3) தொரவக குகையிலாகும். (4) பில்லாவ குகையிலாகும்.
(5) வெட்டம்புகலை குகையிலாகும். (.........)

**2.** 'புத்த பகவானுக்கு தபசு, பல்லுக ஆகிய வணிகர்கள் தேனும் தினைமாவும் தானம் கொடுக்கும் ஓவியத்தைக்' காணக்கிடைப்பது
(1) திம்புலாகலை மாறாவீதி குகையிலாகும்.
(2) மகியங்கனை தூண் ஓவியங்களிலாகும்.
(3) புள்ளிகொடை குகை ஓவியங்களிலாகும்.
(4) ஹிந்தகல குகைச் சுவரிலாகும்.
(5) கொணாகொல்ல குகையிலாகும். (.........)

**3.** 1891 ஆம் ஆண்டில் இலங்கை கலைச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டமைக்கான நோக்கம்
(1) அரூபவாத எண்ணக்கருவை பிரபல்யமடையச் செய்தலாகும்.
(2) மரபுரீதியான உள்நாட்டு ஓவியக்கலையைப் பாதுகாத்தலாகும்.
(3) அரூபரீதியான ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்துதலாகும்.
(4) சாஸ்திராலய யதார்த்தவாத ஓவிய முறையைப் பிரபல்யமடையச் செய்தலாகும்.
(5) கனவடிவவாத கலைநுட்பங்களை அறிமுகப்படுத்துதலாகும். (.........)

**4.** பாரதத்தில் 'மௌரியர்' காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதும் நிர்மாணிப்பில் முழுமைபெற்றதுமான தூண் தலைப்பாகக் கருதப்படுவது

(1) லௌரிய நந்தனகர் (2) ராம்பூர்வா
(3) சாராணாத் (4) சாஞ்சி
(5) வைசாலி (.........)


**5.** ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்டகால குகை ஓவியங்களுள் '17 அடி நீளமான எருதின் உருவத்தைக்' காணக்கிடைக்கும் குகை

(1) பொண்டிதி கோமே (2) லஸ்கோ
(3) அல்டமீரா (4) சொவே
(5) கோகுல் (.........)

● **6** தொடக்கம் **10** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை, 1** தொடக்கம் **9** வரை இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


1



2


3


4


5


6


7


8


9

Department of Examinations

**6.** கடோல்கல்ல பரம்பரை ஓவியர்களால் வரையப்பட்ட ஓவியம் எது?

(1) 4 (2) 5 (3) 6 (4) 8 (5) 9 (.........)

**7.** புத்த ஜாதகக்கதைகளின் தொனிப்பொருள் **அல்லாத** ஓவியங்கள் யாவை?

(1) 4,5 (2) 5,6 (3) 6,7 (4) 7,8 (5) 7,9 (.........)

**8.** மெதவலை விகாரையிலிருந்து எடுக்கப்பட்டுள்ள ஓவியங்கள் யாவை?

(1) 1,3 (2) 2,3 (3) 3,4 (4) 4,5 (5) 5,6 (.........)

**9.** இவற்றுள் குகை விகாரைகளுடன் தொடர்புடையனவாகக் கருதப்படும் ஓவியங்கள் யாவை?

(1) 1,2,5 (2) 2,3,5 (3) 2,5,7 (4) 4,5,7 (5) 5,6,7 (.........)

**10.** கண்டி மரபிற்குரிய மலைநாட்டுப் பாணியைச் சித்திரிக்கும் ஓவியங்கள் யாவை?


(1) 1,2,3,7 (2) 2,3,4,7 (3) 3,4,5,6 (4) 4,5,6,9 (5) 5,6,7,8 (.........)

● **11** தொடக்கம் **15** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை, A, B, C, D, E** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.


A


B


C


D


E

**11.** **A** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) அருபரீதியான திண்ம வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள ஓவியமாகும்.
(2) திண்ம ஊடகங்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட யதார்த்தவாத ஓவியமாகும்.
(3) வர்ணப் பயன்பாட்டின்போது சாஸ்திராலய நுட்பமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ள ஓவியமாகும்.
(4) பொருட்களின் நியம இயல்புகளை யதார்த்தபூர்வமாகப் பயன்படுத்தியுள்ளதொரு சந்தர்ப்பமாகும்.
(5) வெளிப்பாட்டின் தீவிரத்தன்மைக்காக எதிர் வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும். (.........)

Department of Examinations

**12.** **B** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியத்தை வரைந்த நாராயணசுவாமி
(1) கோயில் ஓவியங்களில் மேலைத்தேய கலைநுட்பங்களைப் பயன்படுத்தினார்.
(2) கதைகூறும் பாணிக்கமைய ஓவியங்களைப் படைத்தார்.
(3) இயற்கையைச் சித்திரிப்பதற்கு முன்னுரிமை வழங்கினார்.
(4) வர்ணங்களைவிட கோடுகளில் அதிக கவனம் செலுத்தினார்.
(5) இந்து சமய இலக்கியங்களில் வரும் சம்பவங்களை யதார்த்தபூர்வமாகச் சித்திரித்தார். (.........)

**13.** **C** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள றிச்சர்ட் கேப்பிரியலின் ஓவியமானது
(1) சமயப் பணியொன்றுக்காகச் செல்லும் பெண்களைப் பற்றியதொரு விபரிப்பாகும்.
(2) வடிவங்களும் வர்ணங்களும் சித்திரிப்புப் பாணியிலும் குறியீட்டுப் பாணியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
(3) முழுப் பரப்பிலும் சிறந்த வர்ண பொருத்தப்பாட்டைப் பேணியுள்ளதொரு படைப்பாகும்.
(4) பெண்களின் இரண்டு குழுக்களுக்கிடையிலான செய்தியொன்று சித்திரிக்கப்படுவதாகும்.
(5) யதார்த்தபூர்வமான தன்மை கலைப்பாங்குடன் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும். (.........)


**14.** **D** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, ஜெமினி ரோயின் ஓவியம்
(1) வேட்டைச் சம்பவமொன்று யதார்த்தபூர்வமாக முன்வைக்கப்படுதலாகும்.
(2) இந்திய கலைப் பண்புகள் சித்திரிக்கப்படும் கற்பனையான வெளிப்பாடாகும்.
(3) இந்திய கிராமியக்கலைச் செல்வாக்குடன் மேற்கொள்ளப்பட்ட கலைநயம்மிக்க ஒழுங்கமைப்பாகும்.
(4) ஓவியர் தனது தனித்துவமான பாணியில் மேற்கொண்ட நிர்மாணிப்பாகும்.
(5) கற்பனையொன்றை அருபரீதியாகக் காட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்டதொரு முயற்சியாகும்.(.........)


**15.** **E** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பெண்ணின் உருவம்
(1) சோகமான தன்மையை வெளிப்படுத்தும் மார்பளவு ஓவியமாகும்.
(2) ஆராயும் பண்பைச் சித்திரிக்கும் யதார்த்தபூர்வமான உரோம மார்பளவு ஓவியமாகும்.
(3) உரோமக் கலைஞர் ஒருவர் வரைந்த, பெண்மை தொடர்பான யதார்த்தபூர்வமான வெளிப்பாடாகும்.
(4) உரோமக் கலைஞர் ஒருவரின் மார்பளவு ஓவியக்கலை தொடர்பான உதாரணமாகும்.
(5) அழகிய இளம் பெண்ணொருவர் தொடர்பாகச் செய்யப்பட்டுள்ள ஓவியப்பாங்கான விபரிப்பாகும்.

(.........)

● **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான** விடையை, **F, G, H, I, J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

**16.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இசுருமுனிய செதுக்கல்

(1) யானைகளின் எளிய உருவங்கள் செதுக்கப்பட்டுள்ள அரியதோர் நிர்மாணிப்பாகும்.
(2) நீர் விளையாட்டொன்றுக்குத் தயாராகும் யானைகளைச் சித்திரிப்பதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(3) அதிக ஆர்வத்துடன் யானைகளின் அசைவுநிலைகள் யதார்த்தபூர்வமாக சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(4) நிலையான பாறையின் பண்பைப் பயன்படுத்தி யானைகளின் மெய்நிலை அசைவுகள் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) யானைகளின் அசைவற்ற நிலைகளை யதார்த்தபூர்வமாக வெளிப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும். (.........)

**17.** **G** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சந்திரவட்டக்கல்

(1) எண்ணக்கருரீதியாகச் செதுக்கப்பட்ட மென்புடைப்புடைய பலகைச் செதுக்கலாகும்.
(2) படிக்கட்டொன்றின் அடிப்பகுதியில் இடப்பட்டுள்ள செதுக்கல் செய்யப்பட்ட பலகையாகும்.
(3) பொலன்னறுவைக் கலைஞரின் பேராற்றலின் மகிமையை எடுத்துக்காட்டும் செதுக்கலாகும்.
(4) அனுராதபுர செதுக்கல் கலைஞரின் திறனைச் சித்திரிக்கும் நிர்மாணிப்பாகும்.
(5) பௌத்த சமயத்தில் விவரிக்கப்படும் மறுபிறவி பற்றிச் சித்திரிப்பதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும். (.........)

**18.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இந்திய பாருத் செதுக்கலினால்

(1) ஜேதவனப் பிரதேசம் புத்தபகவானுக்கு கையளிக்கப்பட்டமை சித்திரிக்கப்பட்டுள்ளது.
(2) புத்தபகவானுக்குப் பதிலாக அரசமரம் பயன்படுத்தப்பட்டதொரு சந்தர்ப்பம் காட்டப்பட்டுள்ளது.
(3) பாருத் கலைஞரின், சம்பவங்களைச் சித்திரிக்கும் ஆற்றல் விளக்கப்பட்டுள்ளது.
(4) அனேபிண்டு சித்தர், புத்தபகவானைச் சந்தித்தமை சித்திரிக்கப்பட்டுள்ளது.
(5) ஜேதவனாராமயவுக்கு புத்தபகவான் வருகை தந்திருந்த சந்தர்ப்பம் சித்திரிக்கப்பட்டுள்ளது. (.........)

**19.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிந்துவெளி முத்திரையினால் சித்திரிக்கப்படுபவர்

(1) கொம்புகளைக் கொண்ட கிரீடம் அணிந்த கடவுளாவார்.
(2) வனத்திற்கும் பிராணிகளுக்கும் அதிபதியான கடவுளாவார்.
(3) யோகாசன நிலையிலுள்ள யோகியாவார்.
(4) கொம்புகளைக் கொண்ட கிரீடம் அணிந்த பசுபதியாவார்.
(5) திரிசூலமொன்றைக் கொண்ட கிரீடம் அணிந்த பூசகராவார். (.........)


**20.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தூண் செதுக்கல்

(1) மிக அலங்காரமானதாகச் செதுக்கப்பட்ட கொறிந்தியன் தூணாகும்.
(2) கொரிந்த் நகரில் பரவலாகக் காணக்கிடைக்கும் ஒரு வகைத் தூணாகும்.
(3) அதீனா தேவாலயத்தில் காணக்கிடைக்கும் தூண் வகையின் தலையாகும்.
(4) கிரேக்கத்தின் மிகப் பழமையான தூணான டொறிக் தூணாகும்.
(5) கிரேக்கத்தில் பரவலாகக் காணக்கிடைக்கும் அயோணிக் தூணாகும். (.........)

Department of Examinations

● **21** தொடக்கம் **25** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை, K, L, M, N, O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப்படைப்புகளிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

**21.** K எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) இந்து சமயச் செல்வாக்குடன் வெண்கல வார்ப்பு முறையில் தயாரிக்கப்பட்டதொரு சிலையாகும்.
(2) மகாராஜனைப் போன்று அமர்ந்திருக்கும் அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவரின் சிலையாகும்.
(3) அனுராதபுரத்தின் இறுதி அரைக் காலப்பகுதிக்குரிய அவலோகிதேஷ்வரர் சிலையாகும்.
(4) வெண்கல திண்ம வார்ப்பு முறையில் தயாரிக்கப்பட்டுள்ள தங்க முலாம் பூசப்பட்ட சிலையாகும்.
(5) வெண்கல ஊடகத்தினால் வார்ப்புச் செய்யப்பட்டுள்ள பத்மபாணி போதிசத்துவர் சிலையாகும். (.........)

**22.** L எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) முன்னேற்றகரமான தொழில்நுட்ப முறையொன்று பயன்படுத்தப்பட்டுள்ள, தெடிகமவிலிருந்து கிடைக்கப்பெற்ற விளக்காகும்.
(2) கி.பி. 13-15 வரையான காலப்பகுதிக்குரிய, உலோகத்தினாலான யானை விளக்காகும்.
(3) தெடிகமவிலிருந்து கிடைக்கப்பெற்ற, தொங்கவிடத்தக்கவாறு நிர்மாணிக்கப்பட்ட கலைப்பாங்கான யானை விளக்காகும்.
(4) முன்னேற்றகரமான தொழில்நுட்பத்துடனும் கலைப்பாங்குடனும் கூடிய கொட்ட விகாரை யானை விளக்காகும்.
(5) உலோக வார்ப்பு முறைக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள, கலைப்பாங்கான யானை விளக்காகும்.(.........)

**23.** M எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) சயனநிலையைச் சித்திரிக்கும் விதத்தில் நிலையான பாறையில் செதுக்கப்பட்ட சிலையாகும்.
(2) பொலன்னறுவை ஆலாகன பிரிவெனா கட்டடத்தொகுதிக்குரிய சயனநிலைச் சிலையாகும்.
(3) பல்லவர்களின் கலைப் பண்புகள் சித்திரிக்கப்படுவதாகக் கருதப்படும் சிலையாகும்.
(4) பராக்கிரமபாகு ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொலன்னறுவை கல்விகாரைத் தொகுதிக்குரிய சயனநிலைச் சிலையாகும்.
(5) அதியுன்னத சிலைப் பண்புகளைச் சித்திரிக்கும், கல்லினால் செதுக்கப்பட்ட பொலன்னறுவைக் காலத்துக்குரிய சிலையாகும். (.........)

**24.** N எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது
(1) கடினச் செயலை விழுமியரீதியாகவும் பௌதிகரீதியாகவும் எடுத்துக்காட்டும் படைப்பாகும்.
(2) போதிசத்துவரின் கடினச் செயலை யதார்த்தபூர்வமாகச் சித்திரிப்பதற்கு காந்தாரக் கலைஞர் மேற்கொண்டதொரு முயற்சியாகும்.
(3) காந்தாரக் கலைஞரின் ஊடகப் பயன்பாட்டையும் கலைத்திறனையும் வெளிப்படுத்தும் சிறந்த உதாரணமாகும்.
(4) பௌத்த இலக்கியத்தில் விவரிக்கப்படும் கடினச் செயல் யதார்த்தபூர்வமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளமையாகும்.
(5) போதிசத்துவரின் மெலிந்த உடலின் தன்மையை கல்லினாலான ஊடகத்தில் சித்திரிக்கும் இந்தியச் சிலையாகும். (.........)

**25.** O எழுத்தினால் வெளிப்படுத்தப்படுவது
(1) கிரேக்க செந்நெறிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட உன்னதமானதொரு படைப்பாகும்.
(2) மறுமலர்ச்சிக் காலத்தில் உருவான அதியுன்னத வெண்பளிங்குச் சிலையாகும்.
(3) கம்பீரமான நபரொருவரைச் சித்திரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட முயற்சியாகும்.
(4) ஹெலனிஸ்டிக் காலத்தில் வாழ்ந்த சிறந்த சிற்பக் கலைஞர் ஒருவரின் சிலையாகும்.
(5) பாப்பரசர் ஜூலியசின் புதைகுழியிலுள்ள பிரதான சிலையாகும். (.........)

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

**26.** ஐரோப்பாவில் பின் மனப்பதிவுவாதம் ஆரம்பிப்பதற்கு ஏதுவான முக்கிய காரணம் யாது?
(1) பொருட்களை விட உணர்வு வெளிப்பாடு முக்கியமானதாகக் கருதப்பட்டமையாகும்.
(2) ஒளியும் இருளும் முப்பரிமாண இயல்புகளைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டமையாகும்.
(3) யதார்த்தபூர்வ வெளிப்பாட்டு மரபானது, ஓவியக்கலையின் முன்னேற்றத்துக்குத் தடையாகக் கருதப்பட்டமையாகும்.
(4) மனப்பதிவுவாதத்தில் காணப்பட்ட வரையறைகளைக் கடந்து புதிய வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமையாகும்.
(5) இயற்கைச் சித்திரிப்பைவிட கற்பனைகளின் மீது கலைஞர்களின் ஈடுபாடு அதிகரித்தமையாகும். (.........)

Department of Examinations

27. வெற்றிகரமான புத்தக மேலட்டை நிர்மாணிப்பில் மிக முக்கியமானதாய் அமைவது
(1) உள்ளடக்கத்துக்குப் பொருத்தமான விதத்தில் வர்ணங்கள், வடிவங்களின் பயன்பாடும் திட்டமிடலுமாகும்.
(2) தலைப்பிற்குப் பொருத்தமான ஆக்கபூர்வமான எழுத்துக்களைப் பயன்படுத்துதலாகும்.
(3) பல்வேறு தொழில்நுட்ப முறையியல்களைப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்துதலாகும்.
(4) பொருத்தமான ஓவியங்களையும் உருவங்களையும் கவர்ச்சிகரமாக நிர்மாணித்தலாகும்.
(5) அச்சிடல் தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு வர்ணங்களைப் பயன்படுத்தத்தக்க விதத்தில் நிர்மாணித்தலாகும். (.........)

28. 'ஓவியப்பாங்கான ஒழுங்கமைப்பு' எனப்படுவது
(1) உளரீதியான எண்ணக்கருவொன்றை எடுத்துக்காட்டும் வர்ணமயமான வெளிப்பாடாகும்.
(2) கற்பனையொன்றை அல்லது அனுபவமொன்றை அடிப்படையாகக் கொண்ட கட்புல வெளிப்பாடாகும்.
(3) வர்ணங்கள், கோடுகள், வடிவங்கள் ஆகிய ஊடகங்களினால் செய்யப்படும் இயற்கையான வெளிப்பாடாகும்.
(4) அலங்கார வடிவங்கள், பிரகாசமான வர்ணங்கள் ஆகியவற்றைக் கொண்ட வெளிப்பாடாகும்.
(5) ஏதேனுமொரு தலைப்பை ரசனைக்குரியதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் வெளிப்படுத்துதலாகும். (.........)

29. அச்சிடலுக்காக பரவல் அலங்காரமொன்றை நிர்மாணிக்கும்போது மிக முக்கியமானதாய் அமைவது
(1) எளிய வடிவங்களையும் வரையறுக்கப்பட்ட வர்ணங்களையும் பயன்படுத்துதலாகும்.
(2) நிர்மாணிக்கப்பட்ட அலங்காரப் பகுதியை, ஏனைய பகுதிகளுடன் சகல பக்கங்களிலும் தொடர்புபடுத்துதலாகும்.
(3) ஆக்கபூர்வமான வடிவங்களின் பயன்பாடும் மனங்கவர் வர்ணங்களைப் பயன்படுத்துதலுமாகும்.
(4) சதுரக்கோலமொன்றின் மீது அமைத்து சமவளவான பல்வேறு அலகுகளினால் முழுப் பரப்பையும் நிரப்பும் விதத்தில் வரைதலாகும்.
(5) பயன்படுத்திய வடிவங்களில் குளிர், வெப்ப வர்ணங்களைப் பொருத்தமானவாறு பயன்படுத்துதலாகும். (.........)

30. அசையாப் பொருள்கூட்ட வரைதலின்போது எதிர்பார்க்கப்படுவது
(1) அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைய பொருள்கூட்டத்தைத் தம் விருப்பப்படி வரைந்து, வர்ணமிட்டு பூரணப்படுத்துதலாகும்.
(2) அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி, இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வரைந்து, வர்ணமிடுதலாகும்.
(3) பொருள்கூட்டத்திலுள்ள பொருள்களை முப்பரிமாண இயல்புகள் வெளிப்படும் விதத்தில் வரைந்து, வர்ணமிடலாகும்.
(4) பொருள்கூட்டத்தில் உள்ளடங்கியுள்ள பொருள்களைச் சரியாக வரைந்து, வர்ணமிடலாகும்.
(5) ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக வரைந்து, அவற்றின் இயல்புகளுக்கேற்ப வர்ணமிடலாகும். (.........)

● **31** தொடக்கம் **35** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்க.

31. இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடம்



(1) மிகப்பெரிய கற்பாறையொன்றின் மீது கட்டப்பட்டுள்ளதொரு விகாரையாகும்.
(2) புவனேகபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் கணேஸ்வராச்சாரியாரினால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) தென்னிந்திய கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(4) பௌத்த, இந்து சமய நிலையமாக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) கம்பளைக் காலத்தில் ஸ்தபதிராயர் என்ற கலைஞரால் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)

32. இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடக்கலைப் படைப்பு



(1) அனுராதபுரக் காலத்திற்குரிய அரச பரம்பரையினருக்காக அமைக்கப்பட்ட, கற்களினாலான நீர்த் தடாகமாகும்.
(2) அனுராதபுரக் காலத்திற்குரிய, கற்களினாலான தடாகங்களுள் மிகச் சிறந்த நிர்மாணிப்பாகும்.
(3) நீர்வளத் தொழில்நுட்ப தேர்ச்சியை எடுத்துக்காட்டும் பெறுமதிமிக்க, கற்களினாலான கலைப்படைப்பாகும்.
(4) அபயகிரி விகாரைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட, கற்களினாலான சோடித் தடாகமாகும்.
(5) சிறப்பாக மினுக்கல் செய்யப்பட்ட, கற்பலகைகளினால் நிர்மாணிக்கப்பட்டதாகும். (.........)




Department of Examinations

**33.** இங்கு காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்பு




(1) இராஜராஜ சோழன் தன் மனைவிக்காக நிர்மாணித்த இரண்டாம் சிவாலயமாகும்.
(2) வெட்டித் தயாரிக்கப்பட்ட கற்றகடுகளைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட சிவாலயமாகும்.
(3) பொலன்னறுவையில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும்.
(4) தென்னிந்தியர்கள் தமது பூஜை வழிபாடுகளுக்காக நிர்மாணித்த கோயிலாகும்.
(5) தென்னிந்திய சோழர்களின் கலைப் பண்புகளைச் சித்திரிக்கும் முதலாம் சிவாலயமாகும். (.........)

**34.** இங்கு காட்டப்பட்டுள்ள அஜந்தா குகையானது



(1) ஓவியங்கள் வரையப்பட்ட குகைகளுள் ஒன்றாகும்.
(2) சைத்திய மண்டபமொன்றின் உட்புறக் காட்சியாகும்.
(3) அலங்காரமாகக் கட்டப்பட்ட விகாரை மண்டபமாகும்.
(4) பிக்குமார்களின் கூட்ட மண்டபமாகும்.
(5) அலங்காரத் தூண்களைக் கொண்ட வட்டவடிவ மண்டபமாகும். (.........)

**35.** இங்கு காட்டப்பட்டுள்ள தேவாலயம்



(1) பாரா அரசர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) எகிப்தில் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயங்களுள் ஒன்றாகும்.
(3) ஹோரஸ் என்ற கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட எட்ஃபு தேவாலயமாகும்.
(4) எமோன் என்ற சூரியக் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கர்ணாக் தேவாலயமாகும்.
(5) நைல் நதியின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள லக்சோர் தேவாலயமாகும். (.........)

- **36** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகச் சரியான விடையை,** பின்வரும் ஓவியத்தைப் பயன்படுத்தி தெரிவுசெய்க.



**36.** இந்த ஓவியம்
(1) தீபஸ்சிலுள்ள புதைகுழியொன்றிலிருந்து கிடைத்ததாகும்.
(2) கீசாவிலுள்ள கோயிலொன்றிலிருந்து கண்டறியப்பட்டதாகும்.
(3) மத்திய இராசதானிக் காலத்தில் வரையப்பட்டதாகும்.
(4) அமர்ணாவிலுள்ள புதைகுழியொன்றிலிருந்து கிடைத்ததாகும்.
(5) புராதன இராசதானிக் காலத்துக்குரியதாகும். (.........)

Department of Examinations

**37.** இந்த ஓவியத்தின் கருப்பொருளாக அமைந்தது
(1) பிரபு ஒருவர் தனது தேஜஸ், அதிகார பலம் ஆகியவற்றை வெளிப்படுத்துதலாகும்.
(2) பப்பிரஸ் மரங்களுக்கிடையில் வேட்டையாடுதலில் ஈடுபட்டிருக்கும் அரசனொருவனின் செயற்பாடாகும்.
(3) பிரபு ஒருவர் தனது குடும்பத்தினருடன் படகொன்றில் ஏறி பறவை வேட்டையில் ஈடுபட்டிருத்தலாகும்.
(4) பிரபுக்கள் சோடியொன்று சூழலின் வனப்பை அனுபவிக்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.
(5) பிரபுக்கள் குழுவொன்று பப்பிரஸ் மரங்களுக்கிடையே படகுச் சவாரியில் ஈடுபட்டிருக்கும் ஒரு சந்தர்ப்பமாகும்.
(.........)

**38.** இந்த ஓவியத்தை ஒழுங்கமைக்கும்போது
(1) தூரதரிசனம், முப்பரிமாண இயல்புகள், பரிமாணக் கோட்பாடுகள் என்பன கவனத்திற் கொள்ளப்படவில்லை.
(2) மனித உருவங்களும் பிராணிகளின் உருவங்களும் முழுப்பரப்பிலும் பரவலடையும் விதத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளன.
(3) கருப்பொருளுக்குப் பொருத்தமான விதத்தில் வடிவங்களுக்கிடையிலான தொடர்பு பேணப்படுமாறு உருவங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
(4) பிரதான பாத்திரத்தைப் போன்று ஏனைய பாத்திரங்களும் மிகப் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளன.
(5) இயற்கையானதும் மரபுரீதியானதுமான வடிவங்கள் பரப்பு முழுவதும் சமனிலையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
(.........)

**39.** இந்த ஓவியத்தை வரையும்போதும் வர்ணமிடும்போதும்
(1) மரபுரீதியான கோடுகளும் வர்ணக் கோலங்களும் பின்பற்றப்பட்டுள்ளன.
(2) பிராணிகளின் உருவங்கள் இயற்கையாகவும் மனித உருவங்கள் மரபுரீதியாகவும் வரையப்பட்டுள்ளன.
(3) குளிர் வர்ணங்களுக்கு முன்னுரிமையளித்து உருவங்கள் விபரமாக வரையப்பட்டுள்ளன.
(4) வர்ணங்களும் கோடுகளும் சமநிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(5) குளிர் வர்ணங்களும் வெப்ப வர்ணங்களும் சிறப்பாகப் பொருந்துமாறு வர்ணங்களும் வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
(.........)

**40.** இவ்வோவியம் பற்றி ஆராயும்போது
(1) கலைஞர், சுதந்திர வெளிப்பாட்டுக்கும் நிலவிய மரபுகளுக்கும் இடையில் சிக்குண்டுள்ளமை தெரிகிறது.
(2) எகிப்திய பிரபுக்களுக்கும் இயற்கைக்கும் இடையே நடைபெறும் போராட்டம் தெளிவாகின்றது.
(3) மரம், செடி, கொடிகள், பிராணிகள், விலங்குகளை விட பிரபுக்கள் அதிகாரம் பொருந்தியவர்கள் என்பது தெளிவாகின்றது.
(4) ரம்மியமான இயற்கையின் வனப்பை ரசிப்பவர்கள் பற்றிய விவரிக்கப்படுகிறது.
(5) மனிதர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கு அழகிய இயற்கை இரையாகியுள்ளமை தெரிகிறது.
(.........)

* *

Department of Examinations

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

### නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம் **51** විෂයය / பாடம் **சித்திரம்**

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 5 | 21. | 3 | 31. | 5 |
| 02. | 4 | 12. | 1 | 22. | 4 | 32. | 4 |
| 03. | 4 | 13. | 4 | 23. | 4 | 33. | 1 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 5 | 35. | 5 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 4 | 36. | 1 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 1 | 37. | 3 |
| 08. | 1 | 18. | 1 | 28. | 2 | 38. | 5 |
| 09. | 3 | 19. | 4 | 29. | 2 | 39. | 2 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 2 | 40. | 5 |

Department of Examinations

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

1. யாப்பகூவ என்பது பாறையொன்றுக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அலங்காரக் காப்பரணாகும்.

(i) யாப்பகூவவில் காணத்தக்க கட்டடக்கலை நிர்மாணிப்பொன்றின் பெயரைக் குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

- படிவரிசைகள்
- சிங்க உருவங்கள்
- புன் கலசத்துடன் பெண் உருவங்கள்
- நுழை மண்டப அடித்தளச் செதுக்கல்கள்
- கதவு நிலைகளும் மற்றும் காற்றுத் துளைகளும்

(ii) இங்குள்ள படிக்கட்டுகளின் இருபுறமும் அமைக்கப்பட்டுள்ள சிங்கத்தின் உருவங்கள் இரண்டையும் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (5 புள்ளிகள்)

- யாப்பகூவ முன்பக்கமாக உள்ள படிவரிசையில் இறுதியில் இரு புறத்திலும் இரண்டு சிங்க உருவங்கள் காணப்படுகின்றன.
- வாலை உயர்த்திக் கொண்டு முன்னங் கால்களால் எழுந்து நிற்கும் விதத்தில் சிங்கங்கள் பாயத் தயாராகும் நிலையில் காணப்படுகிறது.
- சற்று குனிந்து இருக்குமாறு நேரே நோக்கியிருக்கும் இச் சிங்க உருவங்கள் பின்பக்க கால்களை மடித்து அமர்ந்து இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளன.
- உரோமங்கள் மோடிமைப்படுத்தப்பட்டு, கண்கள் பெரிதாகவும், பற்கள் பெரிதாக வெளித்தள்ளியவாறும் சிறப்பம்சமாக செதுக்கப்பட்டுள்ளது.
- கருங்கல்லை ஊடகமாகக் கொண்டு உயிரோட்டமாக செதுக்கப்பட்டுள்ளது.

(iii) யாப்பகூவவின் முழுமையான கட்டடக்கலை நிர்மாணிப்பில் செதுக்கல் கலை அலங்கார ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது பற்றி பின்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(அ) பயன்படுத்தப்பட்டுள்ள செதுக்கல் வகைகள்

(ஆ) சித்திரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள்

(இ) பயன்படுத்தப்பட்டுள்ள கலைநுட்பங்கள்

(ஈ) கலைப்பெறுமதி

- யாப்பகூவ 1ஆம் புவனேகபாகு மன்னன் காலத்தில் கிபி 1273 கட்டப்பட்டதாக கருதப்படுகிறது.
- 300 உயரமான குன்றின் மீது கிழக்கு மேற்கு திசைகள் சார்ந்ததாக வட்ட வடிவத்தில் நீர் ஓடைகள் மற்றும் அரண்கள் அமைத்து இது கட்டப்பட்டுள்ளது.
- எதிரிகள் தொல்லைகள் காணப்பட்டதால் பாதுகாப்புத் தந்திரங்கள் பலவற்றைக் கொண்டு அழகுடன் அமைக்கப்பட்டுள்ளது.

அ. - படிவரிசையின் செதுக்கல்கள்
- கதவு நிலைகள் காற்றுத்துளைகளின் செதுக்கல்கள்

**படிவரிசையின் செதுக்கல்கள்**

- புன்கலத்துடன் பெண் உருவங்கள்
- சிங்க உருவங்கள்
- நுழை மண்டபத்தின் அடித்தளச் செதுக்கல்கள்

Department of Examinations

**கதவு நிலைகள் மற்றும் காற்றுத் துறைகளின் செதுக்கல்கள்**

- மகர தோரணம்
- கிபிகி முகம்
- கஜலக்ஷ்மி

**ஆ. புன்கலத்துடன் பெண் உருவங்கள்**

- படிவரிசையில் இரு புறத்திலும் புன்கலத்தை ஏந்தியபடி பெண் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**சிங்க உருவங்கள்**

- முன்பக்கமாக உள்ள படிவரிசையின் இறுதியில் இரு புறத்திலும் இரு சிங்க உருவங்கள் காணப்படுகின்றன.

**நுழை மண்டப அடித்தளச் செதுக்கல்கள்**

- நுழை மண்டபத்தின் கற்களாளான அடித்தள செதுக்கல் நடனமாடும் மற்றும் இசைக்கும் பெண்களின் உருவங்கள் காணப்படுகின்றன.

**கதவு நிலைகள்**

- செவ்வக வடிவமைப்பில் சட்டங்களின் கரைகள் மணியுறுக்கட்டுக்களால் அமைக்கப்பட்டுள்ளன.

**காற்றுத்துளைகள்**

- காற்றுத்துளைகளின் மேல் கிபிகி முகத்துடன் இரு புறமாக மகரதோரணம் காட்டப்பட்டுள்ளது. மத்தியில் கஜலக்ஸ்மி உருவம் காட்டப்பட்டுள்ளது.

**இ. படிவரிசை**

- நன்கு மெருகூட்டப்பட்ட கற்தகடுகளினால் காட்டப்பட்டுள்ளது படிகள் மிக நெருக்கமாக காட்டப்பட்டுள்ளது.

**புன்கலத்துடன் பெண் உருவங்கள்**

- திரிபங்க நிலையில் ஒரு கையில் புன்கலத்துடன் மறுகையை தொடையில் வைத்தபடி நேராக பார்த்த வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது.
- காவற்கல்லின் நாகராஜ வடிவத்தை ஒத்த தன்மையில் செதுக்கப்பட்டுள்ளது.

**சிங்க உருவங்கள்**

- வாலை உயர்த்திக் கொண்டு முன் கால்களால் எழுந்து நின்று சிங்கம் பாயத்தயாராகும் நிலையில் காட்டப்பட்டுள்ளது.

**கஜலக்ஸ்மி**

- மகர தோரணத்தின் மத்தியில் இருந்த நிலையில் காணப்படும் கஜலக்ஸ்மியின் உருவுக்கு இரு யானைகள் இருபுறமும் தும்பிக்கையால் இருபுறமும் நீர் வீசுவது போல சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஈ. - கருங்கல்லை ஊடகமாகக் கொண்டு மெருகூட்டி செதுக்கப்பட்டுள்ளது.
- உருவங்களில் அங்க அசைவுத்தன்மை, லயம், உயிரோட்டம் காட்டி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- நேர்த்தியாகவும், பூரணத்துவத்துடனும் அமைக்கப்பட்டுள்ளது.

Department of Examinations

**2.** பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட திவங்க சிலைமனை பெறுமதி வாய்ந்ததொரு கலைநிலையமாகும்.

(i) திவங்க சிலைமனையின் அந்தராள மண்டபத்தில் காணத்தக்க ஓவியங்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

- தேவ ஆராதனை
- விதுர ஜாதகக்கதை
- அசங்க ஜாதகக் கதை
- சுல்ல பதும ஜாதகக்கதை
- சச ஜாதகக்கதை
- மைத்திரிய ஜாதகக்கதை
- தேமிய ஜாதகக் கதை
- மகா சுதஸ்ஸன ஜாதகக்கதை

(ii) "இந்தச் சிலைமனையினுள் இரண்டு காலப்பகுதிகளுக்குரிய ஓவியங்களைக் காணத்தக்கதாயுள்ளது." சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

- திவங்க சிலை மனையினுள் இரண்டு காலங்களுக்குரனிய ஓவியங்கள் காணக்கூடியதாக உள்ளது.

**பொலன்னறுவைக்காலம்**
- தேவாராதனை
- புத்தர் சங்கிஸ்ரபுரத்துக்கு ஏணியில் இறங்கும் காட்சி
- பொலன்னறுவைக்கால ஓவியங்கள் இடை மண்டபத்திலும் கர்ப்பக்கிரகத்திலும் வரையப்பட்டுள்ளன.
- இவை விசாலமான சித்திரங்களாக வரையப்பட்டுள்ளன.
- மகாயானவில்உள்ளடக்கப்பட்டபுத்தர்மற்றும்தெய்வஉருவங்களைக்கொண்டஎண்ணக்கருக்களாக வரையப்பட்டுள்ளன.

**கண்டிய காலம் மற்றும் பொலன்னறுவைக்காலம்**
- தேமிய ஜாதகக் கதை
- அசங்கவதி ஜாதகக்கதை
- சுள்ள பதும ஜாதகக்கதை
- மைத்திரிபல ஜாதகக்கதை
- உம்மக்க ஜாதகக்கதை
- பந்தன மொக்க ஜாதகக்கதை

- இவை சுவர்கள் கீற்றுகளாக பிரிக்கப்பட்டு கதைகள் தொடர்ச்சியாக வரும் விதத்தில் வரையப்பட்டள்ளது.
- இவ்விரண்டு கால ஓவியங்களும் இரேகையை மையமாகக் கொண்டு வரையப்பட்டுள்ளது.
- ஆடையணிகள், ஆபரணங்கள், உடலமைப்பு ஆகியவற்றின் பண்புகளும் விளக்கமும் இரேகை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- வெப்ப வர்ணத்தொகுதி உபயோகிக்கப்பட்டுள்ளன.



Department of Examinations

(iii) 'தேவாராதனை' என்ற ஓவியத்தை அடிப்படையாகக் கொண்டு, போதிசத்துவ எண்ணக்கரு, அதனை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கமைப்பு மாதிரி ஆகியவற்றை விளக்குக.

- திவங்க சிலைமனை கிபி 12 ஆம் நூற்றாண்டில் பராக்கிரமபாகு மன்னனால் கட்டப்பட்டது.
- திவங்க ( மூவளைவு கொண்ட ) புத்தர் சிலையொன்று கர்ப்பக் கிரகத்தினுள் அமைந்திருப்பதால் இது இப்பெயரால் அழைக்கப்படுகின்றது.
- இடை மண்டபத்தில் காணப்படும் முக்கியமான ஓவியமாக தேவாரதனை கூறப்படுகிறது.
- இவ் ஓவியத்தில் வணங்கும் கிளையுடன் தெய்வ உருவங்கள் வரிசையாக சித்தரிக்கப்பட்டுள்ளன.
- தெய்வ உருவங்கள் அழகிய மகுடத்துடன், ஆடையணிகளுடனும் காட்டப்பட்டுள்ளன.
- இரேகைகளின் வடிவமைப்பைக் கொண்டு வரையப்பட்டுள்ளன.
- சிவப்பு, மஞ்சள், கருஞ்சிவப்பு, கறுப்பு கலந்த வெப்ப வர்ணத்தொகுதி உபயோகிக்கப்பட்டுள்ளன.
- புத்தரின் போதிசத்துவர் உருவம் மத்தியிலும் ஏனைய தெய்வ உருவங்கள் இவரைச் சூழ்ந்தும் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளது.
- தெய்வ உருவங்கள் மஞ்சள் சார்ந்த வர்ணத்திலும் போதிசத்து வரை வேறுபடுத்தி காட்ட நீலச்சாம்பல் வர்ணமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- திவங்க ஓவியங்களில் முப்பரிமாணம், ஒளிநிழல் காட்ட முயற்சித்துள்ளனர்.
- தவுதிஸா தேவாலயத்திற்கு சென்ற பத்மபாணி என்பவர் மானிட உலகில் மனிதனாக பிறக்கும் விடுக்கும் அழைப்புதான் தேவராதனை என கூறப்படுகிறது.
- போதிசத்துவரின் முகபாவமானது அமைதி, சாந்தம், ஆன்மீகம் காண்பித்து வரையப்பட்டுள்ளது.
- போதிசத்துவர் உருவம் திரிபங்க நிலையில் வலது கையில் தாமரைப்பூவுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது.

Department of Examinations

**3.** இலங்கையிலுள்ள குகை விகாரைகளுள் மிகப்பெரியதான தம்புள்ளை குகையானது கண்டி காலத்திற்குரிய ஓவியங்கள், சிலைகள் பலவற்றைக் கொண்டதோர் அருங்காட்சியகமாகும்.

(i) தம்புள்ளை விகாரைக்குரிய **இரண்டு** குகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

- தேவராஜ குகை
- ரஜமகா குகை
- அலுத் விகாரை
- 2வது அலுத் விகாரை
- பஸ்சீம அலுத் விகாரை

(ii) "தம்புள்ளை விகாரைத் தொகுதியில் பல்வேறு நிலைகளைச் சித்திரிக்கும் புத்தர் சிலைகளைக் காணத்தக்கதாயுள்ளது." சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

- தம்புள்ள விகாரைத்தொகுதியில் நின்ற நிலை புத்தர் சிலைகள், அமர்ந்த நிலைப் புத்தர் சிலைகள், துயில் நிலை புத்தர் சிலைகள் பாரிய சிலைகளாக அமைக்கப்பட்டுள்ளன.
- கண்டிய காலத்துக்குரிய அதிக எண்ணிக்கையான புத்தர் சிலைகள் காணப்படுகின்றன.
- முகங்களின் பாவ வெளிப்பாடு கம்பளை காலத்தை விட சாந்தமான இயல்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.
- திறந்த பெரிய கண்களுக்கு பதிலாக ஓரளவு பெரிய கண்களை கொண்டு செதுக்கப்பட்டுள்ளன.
- அளவுத்திட்டம் பின்பற்றப்பட்டு, இயற்கை இயல்புடன் செதுக்கப்பட்டுள்ளது.
- சேகமானது வலஞ்சுழியாக ஆழமான சுருளாக காட்டப்பட்டுள்ளது.
- தலையில் தீச்சுடர் காட்டப்பட்டுள்ளது.

- சில புத்தர் சிலைகள் மரத்தால் ஆக்கப்பட்டு சுண்ணாம்புச் சாந்து பூசி வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- மேலும் சில புத்தர் சிலைகள் செங்கல், சுண்ணாம்புச் சாந்து உபயோகித்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- காவியுடையானது ஒரு தோல் மட்டும் மூடியபடி அலைவடிவில் தடிப்பாக செதுக்கப்பட்டுள்ளன.

(iii) தம்புள்ளை விகாரையில் காணத்தக்க மிகப்பெரிய கூரை ஓவியமான 'எமனின் தோல்வி' என்ற ஓவியம் தொடர்பில் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு விவரிக்குக.

(அ) கலைப் பங்களிப்பு
(ஆ) ஒழுங்கமைப்பு மாதிரி
(இ) வெளிப்பாடு
(ஈ) கலைத்திறன் (8 புள்ளிகள்)

- தம்புள்ள ரஜமகா விகாரை வரலாறானது வலகம்பாகு மன்னன் காலத்துக்குரியது எனவும் ஓவிய நிர்மாணிப்புக்கள் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் மன்னனின் ஆட்சிக்குரியதெனவும் கூறப்படுகிறது.
- தம்புள்ள மத்திய மகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- 5 சிலை மனைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அ. - தம்புள்ள 2 ஆம் குகையில் கூரையில் காணப்படும் பாரிய அளவிலான ஓவியம் எமனின் தோல்வி ஓவியமாகும்.
- புத்தரின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட கருப்பொருளின் வரையப்பட்ட முக்கியமானதொரு ஓவியமாகும்.
- மலைநாட்டு அரசர்களின் உதவியுடன் ஓவியங்கள் வளர்ச்சியடைந்தது.
- நீலகம்மா சந்ததிக்குரிய ஓவியங்களால் இங்குள்ள ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

ஆ. - இவ் ஓவியத்தில் புத்தரின் உருவம் பூமிபரிச முத்திரையுடன் அழகு மிக்க ஒளிக்கீற்றுகளால் வரையப்பட்டுள்ளது.
- புத்தரின் உருவைச் சுற்றி இயமன்களின் உருவங்கள் கூட்டாக வரையப்பட்டுள்ளது.
- புத்தரின் காலடியில் யானையிலிருந்து விழும் இயமனின் மகனின் உருவம் காட்டப்பட்டுள்ளது.
- ஓவியத்தின் ஒரு புறத்தில் பூமித்தாய் காட்டப்படுகிறது.

இ. - கருப்பொருளுக்கேற்ப உருவங்களை துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளனர்.
- புத்தரின் உருவம் சாந்தமான முகபாவனையுடன் காட்டப்பட்டுள்ளது.
- உருவங்கள் கையில் ஆயுதங்களுடன், போருக்குரிய ஆடைகளுடன் வெவ்வேறு நிலைகளில் வரையப்பட்டுள்ளது.
- யானையின் பாவ உணர்வு, அசைவுகள், லயம் போன்றன முப்பரிமாணத் தன்மையுடன் உயிரோட்டம் காட்ட முயற்சித்துள்ளனர்.

ஈ. - சகல உருவ்களும் ஒரே தளத்தில் வரையப்பட்டுள்ளன.
- மோடிப்படுத்தப்படுத்தப்பட்ட இயல்புகளுடன் வரையப்பட்டுள்ளன.
- இருபரிமாண முறையில் வரையப்பட்டுள்ளன.
- முப்பரிமாணம், தூரநோக்கு, பிரமாணம், திரட்சித்தன்மை காண்பிக்கப்படவில்லை.
- உருவங்கள் குறியீட்டு வடிவில் வரையப்பட்டுள்ளன.
- மனித உருவங்களில் அசைவு, லயம் காட்டப்படவில்லை.
- வெளி இரேகைகள் கருப்பு வர்ணத்தால் வரையப்பட்டுள்ளது.
- சித்திரங்களின் இடைவெளிகளை நிரப்ப பாரம்பரிய அலங்காரங்களான தாமரை, தாழம்பூ சம்புமலர், கடுப்புல் மலர் பயன்படுத்தப்பட்டது.

Department of Examinations

## பகுதி 'ஆ'
## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**4.** ஆந்திராவில் அமைந்துள்ள அமராவதி என்பது கட்டடக்கலை, சிலைகள், செதுக்கல்கள் ஆகிய கலைக்கூறுகளினால் நிறைந்த பௌத்த நிலையமாகும்.

(i) அமராவதியில் காணத்தக்க வட்டவடிவ செதுக்கற்றகடுகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

- நாளகிரி தமனய (நளகிரி யானையை அடக்குதல்)
- ராகுல் இளவரசன் வரம் கேட்டல்

(ii) "அமராவதி செதுக்கல்களில் புத்தரின் வாழ்வியலினூடாகக் காட்டப்பட்டதும் காட்டப்படாததுமான செதுக்கல்களையும் காணத்தக்கதாயுள்ளது." சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

- அமராவதி செதுக்கல்களில் புத்தரின் சரிதை நிகழ்வுகளில் முக்கியமான சந்தர்ப்பங்கள் மட்டும் செதுக்கப்பட்டுள்ளன.
- புத்தரின் வாழ்வியலினூடாக காட்டும் சந்தர்ப்பங்களாக
  நாளகிரி தமனய
  ராகுல் இளவரசன் வரம் கேட்டல் கூறப்படுகிறது.
- புத்தரின் வாழ்வியலினூடாக காட்டப்படாத சந்தர்ப்பமாக
  மாயாதேவியின் கனவு கூறப்படுகிறது.
- நாளகிரி தமனய (நாளகிரி யானையை அடக்குதல் – மதம் கொண்ட யானையை மக்கள் புடை சூழ புத்தர் பிரான் வந்து அடக்கி அவரை யானை வணங்குவதாக காட்டப்பட்டுள்ளது.)
- ராகுல் இளவரசன் வரம் கேட்டல் – தளத்தின் மத்தியில் புத்தர் பிரான் இரு தோள்களும் மூடியபடி சந்தத்துடன் கூடிய காவியுடையுடன் காட்சியளிக்கிறார். சுற்றியிருப்பவர்கள் புத்தரை வணங்கியபடி காட்டப்பட்டுள்ளது.
- மாயாதேவியின் கனவு – நால்வகைத் தேவர்களுடைய பட்டத்து ராணிகள் மகாதேவியை அனோதப்த குளத்துக்கு அழைத்துச் சென்று குளிப்பாட்டும் விதம் சிறந்த கலைப்பண்புகளுடன் செதுக்கப்பட்டுள்ளது.

(iii) புத்தருடைய வாழ்க்கையின் முக்கிய சந்தர்ப்பங்கள் நான்கினைச் சித்திரிக்கும் செதுக்கல்களைக் கொண்ட தூணொன்று கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த சந்தர்ப்பங்கள் **நான்கையும்** விவரித்து, அவை ஒவ்வொன்றினதும் மாதிரி பற்றி ஆராய்க. (8 புள்ளிகள்)

- அமராவதி செதுக்கல்களில் தூணில் காணப்படும் புத்தரின் சந்தர்ப்பங்கள் காட்டும் 4 செதுக்கல்களாவன
  இல்லற வாழ்க்கையை துறத்தல்
  ஞானம் பெறல்
  முதல் தர்ம போதனை
  பரி நிர்வாணம்
- இப்புத்தரின் சந்தர்ப்பங்களில் அதிகமான உருவங்கள் அம.ர்ந்த நிலையில் உள்ளன.
- தோலின் ஒரு பகுதி மட்டும் மூடிய காவியுடை காணப்படுகிறது. இது சந்தத்துடனான மடிப்புக்களைக் கொண்டது.
- முழங்கை மேல் நோக்கி மடிக்கப்பட்ட இடக்கையில் இருந்து காவியுடை கீழே தொங்க விடப்பட்டுள்ளது.
- வலக்கை அபய முத்திரையை காட்டுகிறது.

Department of Examinations

- முகங்கள் நீள்வடிவமுடையதாக செதுக்கப்பட்டுள்ளது.
- கேசம் சுருள் வடிவிலும் தலையில் குடுமியுடன் காட்டப்பட்டுள்ளது.
- உரோமை பண்புகளை வெளிக்காட்டி செதுக்கப்பட்டுள்ளது.
- உருவங்கள் நீளமாக, ஆடை எளிமையாக, ஆபரணம் குறைவாக செதுக்கப்பட்டுள்ளது.
- கருப்பொருளுக்கேற்ப உயர்வான பாவ உணர்வு காட்டி செதுக்கப்பட்டுள்ளது.
- தாழ்புடைப்பு நுட்பமுறையில் செதுக்கப்பட்டுள்ளது.
- தூரநோக்கு பண்புகளுடன் உருவங்கள் ஒன்றுடன் ஒன்று மறைந்து நுட்பமாக செதுக்கப்பட்டுள்ளது.
- ஆரம்ப செதுக்கல்களில் புத்தருக்கு பதிலாக குறியீடுகளும், பின்னர் புத்தர் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

இல்வாழ்க்கையை துறத்தல்

- தூணில் மேலிருந்து கீழ் நோக்கி செதுக்கப்பட்ட 4 சந்தர்ப்பங்களில் இது நேர்த்தியாக செதுக்கப்பட்டுள்ளது.
- சித்தார்த்தர் கந்தக குதிரை மீது செல்வதாகவும், தேவர்கள் குடை பிடிப்பதாகவும் செதுக்கப்பட்டுள்ளது.
- குதிரையின் செயற்றிறன் தன்மையும் அவை அலங்கரிக்கப்பட்ட விதமும் கவர்ச்சிகரமானது
- தெய்வ உருவங்கள் அலங்கார ஆடையணிகளுடன் செதுக்கப்பட்டுள்ளது.

Department of Examinations

**5.** இந்திய ஓவியக்கலைக்கு பெறுமதிமிக்க பங்களிப்பை ஆற்றிய கலைஞர்கள் தமக்கே உரித்தான பாணிகளினூடாக தமது நாட்டின் ஓவியக்கலை மரபுகளைப் போஷித்துள்ளனர்.

(i) ராஜா ரவிவர்மாவின் ஓவியப் படைப்புகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

- சரஸ்வதி
- இந்திரஜித்தின் வெற்றி

(ii) புதிய மறுமலர்ச்சி இயக்கக் கலைஞரான நந்தலால் போஸ்சின் ஓவியங்கள் பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (5 புள்ளிகள்)

- இந்திய ஓவியக்கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய கலைஞர்
- கல்கத்தா கலைக்கல்லூரியில் கல்வி பயின்றார்.

**நஞ்சுண்ட கண்டன்**

- அஜந்தா / எல்லோரா கலைப்பாணியைத் தழுவி நிர்மாணிக்கப்பட்டது.
- குளிர்ச்சியான வர்ணங்களால் வரையப்பட்டுள்ளது.
- சிவனின் இரு கால்களின் பாதங்கள் இரண்டும் ஒன்றோடு ஒன்று பொருந்தும் வகையில் சாந்த சொரூபமாக அமைந்திருப்பதாக காட்டப்பட்டுள்ளது.
- வலது கையில் நச்சுக்கிண்ணத்துடன் உடலில் மேற்பகுதி ஆடைகளின்றி காட்டப்பட்டு, கழுத்தில் மாலையொன்றும் காட்டப்பட்டுள்ளது.
- ஒளி வட்டம் சாம்பல் நிறத்தில் காட்டப்பட்டுள்ளது.

**ராதாவின் விரகதாபம்**

- கேத்திர கணித பண்புகளை கையாண்டு வரையப்பட்டுள்ளது.
- ராதை கட்டிலில் சயனித்திருப்பதாகவும், அருகில் இரு தோழிகள் அவருக்கு ஆறுதல் கூறுவதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- குளிர், வெப்ப வர்ணங்கள் இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பிரபல்யமான தலைப்பாக இருந்தாலும் அதனை புதிய பாணியில் வரைந்துள்ளார்.

(iii) "அம்ரிதா ஷேர்கில் தனது ஓவியங்களின் மூலம் இந்திய மக்களின் வாழ்வியல் பற்றி விவரித்துள்ளார்." இக்கூற்றை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(அ) செல்வாக்கு
(ஆ) விடயப்பொருள்
(இ) கலைப் பண்புகள்
(ஈ) வர்ணப் பயன்பாடு

(8 புள்ளிகள்)

- 20 ஆம் நூற்றாண்டில் இந்திய ஓவியக்கலையுடன் பணியாற்றிய முக்கியமான பெண் ஓவியவராவார்.
- இவரின் ஓவியங்களில் கருப்பொருளாக இந்தியப் பெண்களும் பெண் பிள்ளைகளும் அதிகமாக வரையப்பட்டுள்ளன.

அ. - பிரான்ஸ் நாட்டு கலைக் கல்வியின் காரணமாக - மனிப்பதிவு வாதப் பண்புகளும், பிற்பட்ட மணப்பதிவு வாதப் பண்புகளும் இவரின் ஓவியங்களில் செல்வாக்கு செலுத்துகின்றன.

ஆ. - இந்தியப் பெண்களும், பெண் பிள்ளைகளும் ஓவியங்களின் விடயப் பொருளாகின.
- சிறந்த ஓவியங்களாக
மூன்று பெண் பிள்ளைகள்
மணம் முடிப்பதற்கு தயாராகும் மணப்பெண் கூறப்படுகிறது.

இ. - மூன்று பெண் பிள்ளைகள் ஓவியத்தில் செயலிழந்த நிலையில் அமர்ந்திருக்கும் 3 பெண் பிள்ளைகளை வெளிக்காட்டுகிறது.
- இவர்கள் பளபளப்பான ஆடை அணிந்திருந்த போதும் சந்தோசமற்ற நிலையை வெளிக்காட்டி வரையப்பட்டுள்ளது.
- மூன்று உருவங்களும் அருகருகே அமர்ந்தபோதும் ஒவ்வொருவரும் தனித்துவமான வெவ்வேறு சிந்தனையால் காட்டப்பட்டுள்ளது.
- மணம் முடிக்க தயாராகும் பெண் ஓவியத்தில் கிராமிய மணப்பெண் ஒருத்தி குளியலுக்கான ஓரிடத்தில் அதற்குத் தயாராகும் நிகழ்வாகும்.
- ஐரோப்பிய அகடமிக் அறிவுக்கு அப்பாற்பட்ட ஓவியமாகும்.
- இந்திய கிராமத்து கலைப்பண்புடன், இயல்பு நிலையை இயல்புக்கு மாறாக வரையப்பட்டுள்ளது.

ஈ. - இயல்பான வர்ணத்தொகுதியை காட்டி வரையப்பட்டுள்ளது.
- பிற்பட்ட மனப்பதிவுவாத ஓவியனான போல் கெகானின் உருவ அமைப்பு, வர்ணப்பயன்பாடு போன்ற பண்புகளுடன் நவீன போக்கில் வரையப்பட்டுள்ளது.

Department of Examinations

## பகுதி 'இ'
## (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6.** 20 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் உருவான 'கனவடிவவாதம்' புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்திய கலை மரபாகும்.

(i) பிக்காசோவின் ஆரம்பகட்ட நிர்மாணிப்புகளை இரண்டு காலப்பகுதிகளுக்குரியனவாக பிரித்துக் காட்டலாம். அந்த **இரண்டு** காலப்பகுதிகளையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

- நீல வர்ண யுகம்
- இளம் சிவப்பு யுகம்
- ஆபிரிக்க தாக்கம் செலுத்திய காலம்
- கனவடிவ வாதம்
- மேன்மை காலம் (உன்னத) (classical)

(ii) பிக்காசோவின் நிர்மாணப் பணிகளில் ஆபிரிக்க நீக்குரோ சிலைகள் ஏற்படுத்திய செல்வாக்கு பற்றி சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

- பிக்காசோவின் நிர்மாணிப்புக்களில் ஆபிரிக்க, நீக்ரோ சிலைகளின் செல்வாக்கு அவிக்னத் யுவதிகள் படைப்பில் காணக்கூடியதாக உள்ளது.
- ஆபிரிக்க வேட முகங்களில் காணப்படும் ஆழமான வெட்டுக்களுடன் கூடிய இயல்புகள், உளரீதியான எதிர் நிலையை பெண்களின் முகங்களின் மூலம் வெளிக்காட்டி உணர்த்தப்பட்டுள்ளது.
- இவ் ஓவியம் மூலம் கனவடிவவாத ஓவியத்தன்மையை காட்டியுள்ளார்.
- பெண்களின் உடல் நிலைகளும், உணர்வு வெளிப்பாடும் ஆபிரிக்க நீக்ரோ இயல்புகளுடன் காட்டப்பட்டுள்ளது.
- அக்கடமிக் கலையில் காணப்படும் பெண்களின் லலிதமான போக்கை விடுத்து கேத்திர கணித வடிவங்களால் இப்பெண் உருவங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இவ் ஓவியத்தின் மூலம் பெண்களின் வெளிப்புற அழகைவிட உள்ளக் குமுறல்களையே ஆணித்தனமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(iii) பிக்காசோவின் கனவடிவவாத ஓவியங்களில் தொகுப்பாய்வுவாத, பகுப்பாய்வுவாத படைப்புகளைக் காணலாம். அதுபற்றி உதாரணங்களுடன் ஆராய்க. (8 புள்ளிகள்)

- பிக்காசோவின் கரைவடிவுவாத ஓவியக்கலையில் தொகுப்பாய்வுவாத, பகுப்பாய்வுவாத காலங்கள் முக்கியமானதாகும்.

தொகுப்பாய்வுவாத கனவடிவுவாதம்
- பெரியளவில் கேத்திர கணித முறையில் வரையப்படும் ஓவியங்களாகும்.
- இவ் ஓவியங்கள் வர்ணங்களுடன் மணலும் கலந்து வரையப்பட்டுள்ளது.
- கேத்திர கணித குறியீடுகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- உதாரணமாக : இசைக்கலைஞர்கள் மூவர் (1921)
  குவர்னிக்கா
  ஓலமிடும் பெண்
- கொலாஜ் வேலைப்பாடுகளை இவ் கனவடிவவாத ஓவியத்தில் காணக்கூடியதாக உள்ளது.

பகுப்பாய்வு கனனவடிவுவாதம்
- கேத்திர கணித வடிவங்கள் சிறியளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இருள் வர்ணங்கள் அதிகமாக காட்டி வரையப்பட்டுள்ளது.
- இயற்கைத்தன்மை அற்ற நிலையில் வரையப்பட்டுள்ளது.

உதாரணமாக : மாஜொலி (majolie - 1910)
செல்ப் போர்ரைட் (Ambrose vollard - 1911 )

Department of Examinations

7. கிரேக்கர்கள் ஆரம்ப காலம் முதலே சிலைகள், கட்டடக்கலை, மட்பாண்டக் கைத்தொழில் ஆகியவற்றில் நிபுணத்துவம் மிக்கவர்களாகக் காணப்பட்டனர்.

(i) கிரேக்கத்தின் தொன்மைக் காலத்திற்குரிய சிலைகள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

- குரோஸ்
- கோறி

(ii) கிரேக்கத்தின் பார்த்தினன் தேவாலயம் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (5 புள்ளிகள்)

- ஆதீனா தேவிக்காக அமைக்கப்பட்டுள்ளது.
- கிபி 5 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டுள்ளது.
- இதில் ஆதீனா தேவதைக்கு வழிபாடுகள் நடாத்தப்பட்டது.
- பீடியஸ், கலிகிரேட்ஸ், இக்தினஸ் போன்ற கலைஞர்கள் நிர்மாணிக்கப்பட்டது.
- இது கட்டட நிர்மாணிப்பைப் போன்று செதுக்கல் வேலைப்பாடுகளிலும் வளர்ச்சியைக் காட்டுகிறது.
- செவ்வக அடித்தள அமைக்கைக் கொண்ட இதில் வெளிப்புறமாக அழகிய பொறிக் தூண்கள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன.
- தேவாலயத்தின் முன்பக்கத் தோற்றத்தில் 8 டொறிக் தூண்கள் காணப்படுகிறது.
- முகப்பின் மேற்பகுதியில் பெடிமன்ர் எனும் அழகிய செதுக்கல் வேலைப்பாடுகளைக் கொண்ட முக்கோண வடிவமைப்பு காணப்படுகிறது.
- இது சலவைக்கல்லை ஊடகமாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட மிகப் பழமையான நிர்மாணிப்பாகும்.
- தூண்கள், வளைகளை தாங்கி நிற்கும் விதத்தில் கட்டத்தின் கூரை அமைக்கப்பட்டுள்ளது.
- அதீனா சிலைக்கு தேவாலய உட்பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- இதன் பீடப்பகுதி ஆலயத்துக்கு வெளியே அமைக்கப்பட்டுள்ளது.
- பாத்தினன் தேவாலயம் எளிமையான அமைப்பில் உருவாக்கப்பட்டாலும் எடுப்பான தோற்றத்துடன் காணப்படுகிறது.

(iii) கிரேக்கத்தில் பிரபல்யமடைந்து காணப்பட்ட மட்பாண்டக் கைத்தொழில் தொடர்பாக பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(அ) பயன்படுத்தப்பட்டமைக்கான நோக்கங்கள்
(ஆ) பாண்டங்கள் தயாரிக்கப்பட்ட விதம்
(இ) அலங்கார நுட்பங்கள்
(ஈ) கலைப்பெறுமதி (8 புள்ளிகள்)

- கிரேக்க மட்பாண்டங்கள் பல்வேறு நோக்கங்களுக்கு நிர்மாணிக்கப்பட்டன.
- கிமு 1000 இலிருந்து கிமு 400 வரையான காலப்பகுதிக்குரியன.

அ. - நீரை நிரப்பி வைப்பதற்கு, எண்ணெய் நிரப்பி வைக்க, வாசனைத் திரவியங்களை இட்டு வைப்பதற்கு, பொருட்களை கொண்டு செல்ல, நாளாந்த பாவனைக்கு எனும் பல்வேறுபட்ட நோக்கங்களுக்கு மட்பாண்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

ஆ. - பல்வேறுபட்ட வடிவமைப்புக்களைக் கொண்ட மட்பாண்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- பீங்கான், கோப்பை, சாடிகள், கூசாக்கள் என விதவிதமான மட்பாண்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- கெரமோஸ் எட்டிக் எனும் களிமண்ணை ஊடகமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.
- வனைச்சில்லின் துணையுடன் அமைக்கப்பட்டுள்ள இவை, கைப்பிடி அடிப்பகுதி என்பன தனியாக அமைத்துப் பின்னர் பொருத்தப்பட்டுள்ளன.

Department of Examinations

இ. - கிரேக்க மட்பாண்டங்கள் அழகிய ஓவியங்களாலும், அலங்கார அமைப்புகளுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- இதில் கருமை நிற வருக்களை கொண்ட மட்பாண்டங்கள் கருமை நிற மட்பாண்டங்கள் எனவும், செந்நிற உருக்களைக் கொண்ட மட்பாண்டங்கள், செந்நிற மட்பாண்டங்கள் என இருவகைகளில் அமைக்கப்பட்டுள்ளன.
- மட்பாண்டங்களில் கிரேக்க கற்பனைக் கதைகள், மதம் சார்ந்த கதைகள், சமூக நிகழ்வுகள், விளையாட்டு வீரர்கள், கடல் விலங்குகள், பூக்கள் செடிகள் என்பன ஓவியங்களாக அலங்கரிக்கப்பட்டுள்ளன.
- மிகப்பழமையான மட்பாண்டங்களில் கேத்திர கணித கோலங்களைக் காணலாம். பிற்காலத்தில் பலவித உடல் நிலைகளைக் கொண்ட லயத்துடன் கூடிய மனித விலங்குருவங்களை அலங்கரித்துள்ளனர்.
- கருமை நிற மட்பாண்டங்கள் சூளையில் இடுமுன் கறுப்பு வர்ணம் பூசப்பட்டு பின்னர் கூரான உபகரணமொன்றினால் மேற்பரப்பை சுரண்டி உருவங்களை வெளிக்கொண்டு வருவர். பின்னர் வெள்ளை, சிவப்பு வர்ணங்கள் பூசப்பட்டு அலங்கரிக்கின்றனர்.

ஈ. - கருமை நிற மட்பாண்டங்கள் பழமைவாய்ந்தவையாகும். கொரிந்தியர்கள் முதலில் உருவாக்கிய மட்பாண்டங்கள் எனக் கூறப்படுகிறது.

- கிமு 700 களிலிருந்து இதுவரை 20,000 க்கு அண்மித்த மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- ஏறக்குறைய கிமு 530 களிலிருந்து செந்நிற மண்பாண்டங்கள் பிரபல்யம் அடைந்துள்ளன.

Department of Examinations